**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**CC.No.26/2021** **DATE : 14.08.2023**

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபு | Father's Name | : தெய்வசிகாமணி |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : தப்பக்குட்டை | Calling | : ஓட்டுநர் |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தப்பக்குட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ எனக்கு தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகமில்லை, இரவு 07.00 மணியளவில் அ.சா.1 க்கு காயம் ஏறபட்டதாக கேள்விப்பட்டேன்.

2) இவ்வழக்கு குறித்து எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 ஐ நான் எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, அவருக்கு கால், கை, தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சி பகுதியளவில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) கடந்த 08-06-2020 ம் தேதி, மாலை 06.30 மணியளவில் ஆஜர் எதிரிகளை அ.சா.1, அ.சா.2 ஐ தடுத்து நிறுத்தி அ.சா.1 ஐ இரும்பு ராடு மற்றும் சுத்தியால் அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்னதை தான் போலிசார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Prabu

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No.26/2021** **DATE : 14.08.2023**

**அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : கோவிந்தன் | Father's Name | : கந்தசாமி |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : தாடிக்காரனூர் | Calling | : தறிவேலை |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

முதல் விசாரணை :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தாடிக்காரனூரில் வசித்து வருகிறேன். நான் தறிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல.

2) சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் மாதம், தேதி ஞாபகமில்லை, அ.சா.1 க்கும், அஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

கடந்த 08-06-2020 ம் தேதி, இரவு 06.30 மணியளவில், அ.சா.1 ஐ, ஆஜர் எதிரிகள் அடித்து காயப்படுத்தியது தொடர்பாக போலிசார் சம்பவ இடத்திற்கு 09-06-2020 ம் தேதி, காலை 11.30 மணியளவில் வந்து என்முன் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர், மாதிரி வரைபடத்தினை தயார் செய்து அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கிகொண்டனர் என்றும், என்னுடன் சேர்ந்து வடிவேல் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார் என்று போலிசார் விசாரணயில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**இல்லை.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Govinthan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**CC.No.26/2021** **DATE : 14.08.2023**

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| Name | : வடிவேல் | Father's Name | : கந்தசாமி |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : இளம்பிள்ளை | Calling | : விவசாயம் |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இளம்பிள்ளையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

கடந்த 08-06-2020 ம் தேதி, இரவு 06.30 மணியளவில், அ.சா.1 ஐ, ஆஜர் எதிரிகள் அடித்து காயப்படுத்தியது தொடர்பாக போலிசார் சம்பவ இடத்திற்கு 09-06-2020 ம் தேதி, காலை 11.30 மணியளவில் வந்து என்முன் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர், மாதிரி வரைபடத்தினை தயார் செய்து அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கிகொண்டனர் என்றும், என்னுடன் சேர்ந்து கோவிந்தன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார் என்று போலிசார் விசாரணயில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**இல்லை.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Vadivel

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.